REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 15உ செவ்வாய் (1—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 16உ புதன் (2—11—55) [இதழ் 119

ஈடேருத காதல்!

பீட்டர் டௌன்செண்டை தான் மணந்துகொள்ளப் போவதில்லை என இளவரசி மார்கரெட் அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. லண்டனில் உள்ள அவரது இல்லத்திலிருந்து அவர் விடுத்துள்ள செய்தி ஒன்று கூறுவதாவது:—

"காப்டன் டௌன்செண்டை நான் மணந்துகொள்ளப் போவதில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்; கிறித்துவத் திருமணங்கள் கடமை உடையவை—என்ற தேவாலய போதனையை மனதில் கொண்டும், காமன்

(4-ம் பக்கம் பார்க்க)

மத்தியமந்திரிக்குக்கருப்புக்கொடி!

★

உடனடியாக 'விசால ஆந்திரம்'

அமைப்பதற்கு ஆந்திரா, ஐதராபாத் மந்திரிகள் கூட்டு முயற்சி

குண்டூர், அக். 31—

உடனடியாக விசால ஆந்திரம் அமைக்கக் கோரி, ஆந்திர—ஐதராபாத் தலைவர்கள் கூட்டாக மனு ஒன்றை பிரதம மந்திரி நேருவிடம் தருவார்கள் என்று கூறப்படுகிறது.

நாகார்ஜுனசாகர் அணைக்கட்டுப் பகுதியில் நேற்றைய தினம் சந்தித்த இரு மாநில முதன் மந்திரிகளும் இது குறித்துப் பேசியதாகவும், அப்போது நாகார்ஜுனசாகரில் கால்கோள் விழா நடத்துவதற்காக பிரதமர் நேரு டிசம்பர் 11-ல் ஆந்திரா வரும்போது இந்த மனுவை அவரிடம் தருவதென முடிவு செய்ததாயும் கூறப்படுகிறது.

ஆந்திர துணை முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி, மந்திரி லட்சண்ணா, மற்றும் ஐதராபாத் மந்திரி மெல்கோட் ஆகியோரும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டனர் என்றும் தெரியவருகிறது.

மாநிலக் குழுத் திட்டத்திற்கு எதிராக ஒரியர்கள் ஆர்ப்பாட்டம்

'கருப்புக் கொடி காட்டுவது கண்ணியமற்றது' என மந்திரியின் பதில்

பரிபாபா, அக். 31—

'பீகாரில் உள்ள சிங்பூம் மாவட்டத்தின் ஒரு பகுதி ஒரிசாவுடன் இணையவேண்டும்' என்ற ஒரியரின் கோரிக்கையை மாநில புது அமைப்புக் குழுவினர் புறக்கணித்துவிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மத்திய உள்நாட்டிலாகா துணை மந்திரி பி. என். தத்தார் இந்த வழியாகச் சென்றபோது, ஒரியர்கள் பலர் கூடிநின்று, கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

ஒரிசாவில் இணைக்கப்பட வேண்டிய ஒரிய மொழி பேசும் பகுதிகளின் நிலப்படங்களை நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் ஒரியர்கள் ஒட்டியிருக்கின்றனர்.

மிதமிஞ்சிய உணர்ச்சியில் செயல்படக்கூடாது என்றும், பல அரசியல் கட்சியினர் காட்டும் தவறான வழிகளில் சென்றுவிடக்கூடாது என்றும் குறிப்பிட்டதுடன் நில்லாது, ஒரு விஷயத்தை உணர்த்துவதற்குக் கருப்புக்கொடி காட்டுவது கண்ணியமான முறை அல்லவென்றும், வேறு நல்ல வழிகள் கையாளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அமைச்சர் தத்தார் தெரிவித்திருக்கிறார்.

தான் மக்களின் எண்ணங்களை உணர்ந்திருப்பதாயும் அவர் தெரிவித்தாராம்.

★

'தமிழ் வட்டங்கள் சென்னையுடன் இணைய வேண்டும்'

நெல்லை மாவட்ட காங்கிரஸ் தீர்மானம்

திருநெல்வேலி, அக். 30—

தமிழ் பேசும் வட்டங்களான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகியவை குழுவின் திட்டப்படி கேரளத்துடன் இணையக்கூடாது எனவும், அவை சென்னையுடன் இணைய வேண்டும் என்றும் கோரி, திருநெல்வேலி மாவட்ட காங்கிரஸ் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

★

நவ. 21-ல் சென்னை சட்ட சபை கூட்டம்

மூன்று நாட்களுக்கு மாநிலக் குழு அறிக்கை மீது விவாதம்

சென்னை, நவ. 1—

மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பற்றி விவாதிப்பதற்காக சென்னை சட்ட சபை கூட்டம் நவ. 21-ந் தேதி கூடுகிறது. மூன்று நாட்கள் விவாதம் நடைபெறும். சபையில் நடைபெறும் விவாத விவரங்கள் முழுமையும் மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்கப்படும்.

சட்ட சபையின் இந்தக் கூட்டத்தில், ஆரம்பக் கல்வி விசாரணைக் குழுவின் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாதெனத் தெரிகிறது.

★

'தமிழ் வட்டாரங்கள் தமிழகத்துடன் இணையக்கூடாதாம்'!

ம. சோ. தலைவரின் கொக்கரிப்பு

திருவனந்தபுரம், அக். 31—

"திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக்கள் சரித்திர, பூகோள ரீதியாக உத்தேசிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்துடன்தான் இருக்க வேண்டும்" என்று, ம. சோ. தலைவரான பட்டம் தாணுபிள்ளை தெரிவித்திருக்கிறார்.

5 தமிழ் தாலுகாக்களை சென்னையுடன் இணைக்க குழு சிபாரிசு செய்திருப்பதை அவர் கண்டித்திருக்கிறார்.

தமிழ் பேசும் மக்களைக் கொண்டவை என்பதாலேயே அந்த வட்டாரங்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று சொல்வது நியாயமல்ல என்றும், வேறு பல நிர்வாக வசதி போன்ற சிக்கல்களையும் கவனிக்க வேண்டும் என்றும் பேசினாராம் அந்த முன்னாள் முதன் மந்திரி!

★

ஷோலாப்பூரில் கடையடைப்பு

ஷோலாப்பூர், அக். 31—

'அகில கர்நாடக ஏகீகரண சங்' என்ற இயக்கத்தின் உள்ளூர் கிளையின் வேண்டுகோளுக்கு ஒப்ப, நகரின் கடைவீதியில் உள்ள பெரும்பாலான கடைகள் இன்று அடைக்கப்பட்டிருந்தன.

ஷோலாப்பூர் நகரம், அக்கல்கோட், மற்றும் அடுத்த கன்னடப் பகுதிகளை, உத்தேசிக்கப்பட்டுள்ள கர்நாடகத்துடன் இணைக்க மாநிலக் குழுவினர் சிபாரிசு செய்ய மறுத்து விட்டதை எதிர்த்தே இந்தக் கடையடைப்பு நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

★

விசால ஆந்திரம் அமைப்பு

தெலிங்கானா காங்கிரசார் எதிர்ப்பு

வட்டாரக் குழுக் கூட்டத்தில் முடிவு

செகந்திராபாத், அக். 31—

மாநிலக் குழுவினரின் திட்டப்படி, எஞ்சும் ஐதராபாத் மாநிலத்தின் தெலிங்கானா பகுதிகளை ஒரு தனி மாநிலமாகவே வைத்திருக்க வேண்டுமென அப்பகுதியைச்சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் குழுக் கூட்டம் இரண்டு நாட்கள் நடைபெற்றது; அதில், 'தெலிங்கானா தனி மாநிலமாக இருக்க வேண்டும்' என்பதற்கு 73 வாக்குகளும், 'ஆந்திரத்துடன் இணைந்து விசால ஆந்திரம் அமைய வேண்டும்' என்பதற்கு 21 வாக்குகளும் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தெலிங்கானா உறுப்பினர்கள் 105 பேர்களில 67 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்; 27 பேர்கள் தங்கள் கருத்தைத் தபால் மூலம் தெரிவித்திருந்தனர்.

பிரதேச காங்கிரசின் கர்நாடக உறுப்பினர்கள், சம்யுக்த கர்நாடக அமைப்பிற்குச் சாதகமாயும், மராத்தி உறுப்பினர்கள் சம்யுக்த மராட்டிய உருவாக்கத்திற்குச் சாதகமாயும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

முதன் மந்திரியான இராமகிருஷ்ண ராவ் கூட்டத்தில் கலந்து கொண்டு, விசால ஆந்திரம் உடன் அமையவேண்டுவதின் அவசியத்தையும், அதனால் ஏற்படக்கூடிய நலன்களையும் எடுத்துக்கூறியும், தெலிங்கானா உறுப்பினர்களில் பெரும்பான்மையினர், விசால ஆந்திரம் அமைவதற்கு எதிர்ப்பாக கருத்தறிவித்திருப்பது விசேட முக்கியத்துவம் பெற்றது எனக் கருதப்படுகிறது.

★

'கன்னடத்துடன் குடகு இணையக்கூடாது'

'தனி மாநிலமாகவே இருக்க வேண்டும்'

முதன் மந்திரி கூற்று

மெர்க்காரா, அக் 31—

மாநிலக் குழுவின் திட்டப்படி குடகு மாநிலம் உத்தேசிக்கப்பட்டுள்ள கர்நாடகத்துடன் இணைக்கப்படக்கூடாதெனவும், தனி மாநிலமாகவே அது இணங்க அனுமதிக்க வேண்டும் எனவும் குடகு முதன் மந்திரி சி. எம். பூணச்சா டில்லியில் நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அவர், டில்லிக்கு வந்திருந்த எல்லா 'சி' பிரிவு மாநில முதன் மந்திரிகளையும் சந்தித்து தனியாக உரையாடியதாகவும், இப்போதிருப்பதைப்போலவே தொடர்ந்து 'சி' பிரிவு மாநிலங்கள் நீடிக்க வேண்டும் என்பதற்கு கூட்டு முன்னணி அமைக்கத் திட்டமிட்டிருப்பதாயும் தெரிவித்திருக்கிறாராம்.

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு

மந்திரிகள் பூர்வாங்க ஆலோசனை

சென்னை, அக். 31—

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறுகள் குறித்து, ஆந்திர மந்திரிகளுடன் நவம்பர் 3-ந் தேதியன்று பேச்சுவார்த்தை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட மந்திரி சபைத் துணைக் குழுவினர், இன்று சர்க்கார் அலுவலகத்தில் கூடி, பேச்சுவார்த்தைகளின்போது தாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை குறித்து உறுதி செய்து கொள்வதற்காக பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றனர்.

மந்திரிகள் சுப்பிரமணியம், பக்தவத்சலம், மாணிக்கவேலு ஆகிய மூவரும்தான், ஆந்திர அமைச்சர் குழுவில் உள்ள கோபால ரெட்டி, சஞ்சீவி ரெட்டி, கானா வெங்கட்ராவ் ஆகியோரைச் சந்திக்கவிருப்பவர்கள்.

சென்னை மந்திரிகள் நடத்திய விவாதத்தின்போது சர்க்கார் செயலாளர்களான டி. ஏ. வர்கீஸ், எஸ். வெங்கடேசுவரன் ஆகிய இருவரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

ஆந்திரா — சென்னை எல்லை முழுவதிலும், கிராமவாரியாக உள்ள மக்கள் தொகைக் கணிதத்தை மந்திரிகள் சோதித்துப் பார்த்தனர் என்றும், பேச்சுவார்த்தைகளின்போது, சித்தூர் எல்லை மட்டும் விவாதிக்கப்படாமல் எல்லையோரச் சிக்கல் முழுவதும் விவாதிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஆந்திர மந்திரிகள் நவம்பர் 3-ந் தேதி முதல் 5-ந் தேதி வரையில் சென்னையிலிருப்பர் என்றும் தெரியவருகிறது.

இந்துக்கள் அகதிகளாக ஓடிவரும் காரணம்!

'இந்தியா தரும் ஆயிரம் ரூபாய்தான்!'

டாக்கா, அக். 31—

"கிழக்கு வங்கத்திலிருந்து இந்தியாவிற்கு ஓடிவருபவர்களுக்கு ரூ 1,000 தரப்படுகிறது; இதனால் பலர் இந்தியாவிற்குச் செல்ல ஆசையூட்டப்படுகின்றனர்.

"பாகிஸ்தானிலிருந்து ஓடிவருவோருக்குக் குடியேற்றப் பத்திரங்கள் வழங்குவதை இந்திய சர்க்கார் சற்று கடினமாக்கினால், பலர் ஓடிவருவதைத் தடுக்க முடியும்,"

—என்று, சிறுபான்மையினர் விவகாரங்களைக் கவனிப்பதற்கான பாகிஸ்தான் மந்திரி நூருல் ஹக் சௌத்ரி, பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

"புதிய மந்திரி சபை அமைந்த பிறகு நிலைகள் மாறிவிட்டிருக்கின்றன; மந்திரி சபையில் மூன்று இந்துக்கள் இடம் பெற்றிருக்கின்றனர்; எனவே, தங்கள் இல்லங்களை விடுத்து இந்தியாவிற்கு ஓட நினைப்பதற்கு மாறாக, சிறுபான்மையினரான இந்துக்கள் புதிய சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் உரிமைகளைப் பெற முயர்சிக்க வேண்டும்.

"சிறுபான்மையினர் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்குக் காரணமாக இரு இயக்கத்தினர் இருக்கின்றனர்; அவர்கள் — வகுப்பு வாதிகளும், கம்யூனிஸ்டுகளுமாவர்; மாநிலம் முன்னேற வேண்டுமானால், இந்த இரு தீய, அழிவுச் சக்திகளை தகுந்த முறையில் கண்காணிக்க வேண்டும்,"

என்றும், அந்த மந்திரி பேசியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—11—'55 செவ்வாய்

கண்காணிக்க வேண்டும்!

"அதிகாரபூர்வமாகவே தெரிவிக்கிறேன்—ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை," என்று, இரு திங்கள்முன், சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், நமக்குப் பதில் தருவதாக நினைத்துக் கொண்டு திருச்சி பொதுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதற்கு முன்பு அதே கனம்தான், கோவையை அடுத்துள்ள பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்டம் குறித்த விவாத அரங்கில், மாநில-மத்திய சர்க்கார் அதிகாரிகள், திட்டக் குழுத் துணைத் தலைவர் ஆகியோர் முன்னிலையில், 'எல்லாத் திட்டங்களும் வடக்கிலேயே; நிறுவப்படுகின்றன; தென்னாட்டில் புதிய தொழில்கள் ஏதும் துவங்கப்படவில்லை; இந்த நிலைமை நீடிக்குமானால், இந்தியாவின் அரசியலில் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும்' என்று, எச்சரிக்கை விடுப்பது போலப் பேசினார்.

அமைச்சர் சுப்பிரமணியம், இப்படி நாளொரு கருத்தும், பொழுதொரு விளக்கமும் தருவதில் நிகரற்றவராயிருக்கிறார் என்பதை, நாம் அவ்வப்போது இங்கு எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

தனது குருநாதர் பெற்றெடுத்த கல்வித் திட்டத்தைப் போற்றிப் புகழ்ந்தவர்—பின்பு, தானே அதைப் புதைகுழியில் தள்ளி மண்ணை அள்ளிப் போட்டு மூடியவர்—என்ற பெருமை பெற்ற மந்திரி அல்லவா அவர்? அப்படிப்பட்டவர், நேரத்திற்கு ஒன்று பேசுவது விந்தையாகத் தோன்றவில்லை, நமக்கு!

ஐந்தாண்டுத் திட்டம், இந்தியாவின் அபிவிருத்திக்கான பல துறைத் தொழில்கள் அடங்கியது—என்று கூறி விளம்பரப்படுத்தினார்கள். இரண்டாயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய் மதிப்பீட்டுடன் தீட்டப்பட்ட திட்டத்தில், தென்னாட்டிற்கு, சில நூறு கோடி ரூபாய்கூடக் கிடைக்கவில்லை. இது வடக்கு வாழவும் தெற்கு தாழவுமாக வடவர் செய்யும் வஞ்சனைகளுள் ஒன்று—என்று, நாம் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி, டில்லி ஆட்சியாளர்களின் ஏகாதிபத்தியப் போக்கையும், தென்னாட்டு அமைச்சரவைகளின் கையறு நிலையையும் தெளிவாக விளக்கி வந்தோம். ஆட்சியிலுள்ள எவரும் அவைகளுக்குப் பதில் தர நினைக்கவில்லை—அவர்களிடம் அந்த நேர்மை இல்லாமையினால்!

பின்னர், நமது குரலுக்கு ஆதரவாக எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் வடவரின் வஞ்சனைக்கு எதிராகக் கண்டனக் குரல் எழும்பிற்று.

மந்திரி சுப்பிரமணியம், எப்படியோ விரதனை வரவழைத்துக்கொண்டு, தனது வடநாட்டு எஜமானர்களின் அவர்களின் முன்னிலையில் உண்மையைக் கக்கினார்!

ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டுமின்றி, இதர எல்லாத் துறைகளிலும், வடநாடு தென்னாட்டை அடிமைகொண்டிருக்கும் கோர நிலை குறித்து, நாம் தந்த விளக்கங்களின் விளைவாக, நமது 'விடுதலைப் படை' வளர்ந்த வண்ணமுள்ளது. இந்த வளர்ச்சியை எப்படியேனும் தடுத்து நிறுத்திவிட மனப்பால் குடிக்கும் சிலரில் ஒருவரான அமைச்சர் சுப்பிரமணியம், சில திங்களுக்குள்ளாகவே, தான் முன்பு கூறியதை மறந்து, 'அதிகார பூர்வமாகக் கூறுகிறேன் — ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை' — என்று கூற முற்பட்டார்.

அதிகார தோரணையில் ஒரு பேச்சு—அதிகாரப் பற்றற்ற தோரணையில் அதற்கு நேர்மாறான பேச்சு—என்பதை அறிவுடையோர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நாடு அவருக்குச் சுட்டிக்காட்டிற்று.

பின்னர், 'முதல் திட்டத்தில்தான் தென்னாடு கவனிக்கப்படவில்லை; இரண்டாம் திட்டத்தில், நாம் கோருவது நிச்சயமாக நமக்குக் கிடைக்கும்,' —என்று கூறி, 'இரண்டாம் திட்டத்தில் சென்னையின் தேவை ரூ. 400 கோடி பெறுமான திட்டம்' என்று, தனது டில்லி எஜமானர்களிடம் கனம் மந்திரி வாதிட்டார்—வாதிட்டதாகச் சொன்னார் அவர்!

ஆனால் நடந்தது என்ன?

'எவ்வளவோ முயன்றோம் —முடியவில்லை; கிடைத்ததே போதும் — திருப்திதான்' என்று, நானூறில் இருநூறைப் பறிகொடுத்துத் திரும்பினர், இந்தக் கனம் — தனது சகா பக்தவத்சலத்தையும், முதல்வர் காமராசரையும் சேர்த்து அழைத்துச் சென்று, டில்லியிலிருந்து திரும்பியபோது!

'தொழில் துறையில் தென்னாடு முன்னேறுவதை வடநாட்டவர் விரும்பமாட்டார்கள்—விரும்ப முடியாது; ஏனெனில், டில்லி ஆட்சியாளர்கள், தென்னாட்டைத் தங்களது நிரந்தர வேட்டைக்காடாக்கத் திட்டமிட்டிருக்கும் ஏகாதிபத்தியவாதிகள் என்பதால்'—என்று, நாம் விளக்கம் தந்தோம் — வடநாட்டவரின் ஏகாதிபத்திய எண்ணத்தை நிரூபிக்க, நாம் காட்டுகிற பல நடைமுறைக் காரணங்களும், இந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைக்கப்படும் தொடர்ந்த அநீதியும் ஒன்றாக அமைகிறது என்பதால்!

இந்த உண்மையை, கடந்த சட்டசபைக் கூட்டத்தில் சில உறுப்பினர்கள் உணர்த்திய போது, மந்திரி சுப்பிரமணியம் மழுப்பினாரே தவிர, காரண விளக்கங்களைக் கூறி நேரடியாகப் பதில் தரவில்லை.

இப்போது, கடந்த ஞாயிறன்று அகில இந்திய தொழில் நுணுக்கக் கல்விக் குழுவின் தென் வட்டாரக் குழுவினைத் துவக்கிவைத்துப் பேசிய அந்த கனம் அமைச்சர், 'தென் வட்டாரம் (சென்னை, ஆந்திரா, திரு—கொச்சி, மைசூர், ஐதராபாத்) தொழில் துறையில் பின் தங்கிக் கிடக்கிறது என்பதால்தான் இந்த வட்டார தொழில் நுணுக்கக் கல்விக்கூடங்களிலிருந்து பயிற்சி பெற்று வெளிவரும் நிபுணர்களுக்கு இந்த வட்டாரத்திலேயே வேலை கிடைப்பதில்லை' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

'அதிகாரிகளும், நிபுணர்களும் அடங்கிய கூட்டத்தில், கனம் சுப்பிரமணியம் உண்மை பேசுகிறார்; மக்களிடத்தில் பேசுகையில் — அவர்களுக்கு என்ன தெரியப் போகிறது என்ற நினைப்பிலோ என்னவோ—உண்மைக்கு நேர் முரணான பொய் உரைக்கிறார்' —என்றுதான் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட மந்திரியை மக்கள், கவனமுடன் கண்காணித்து வரவேண்டும் என்பதற்காகவே, அவரது போக்கில் காணப்படும் முரண்பாடுகளை இங்கு சுட்டிக் காட்டுகிறோம்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய பால் பவுடர் உற்பத்தித் தொழிற்சாலைகள்

இரண்டும் வட நாட்டிலேயே அமையும்!

ராஜ்கோட், அக். 31—

ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய பால் பவுடர் உற்பத்தித் தொழிற்சாலை மத்திய சௌராஷ்டிரத்தில் பாமன்பூர் சோதிலா, வான்கானெர் பகுதியில் அமையும் என்றும், 1957-ல் உற்பத்தி துவங்கும் என்றும் தெரியவருகிறது.

ரூ. 10 இலட்சம் செலவில், 10 இலட்சம் டன் உற்பத்தி சக்தியுடன் துவங்கும் இந்தத் திட்டத்திற்கான பூர்வாங்க விசாரணையை சர்வதேசக் குழந்தைகள் அவசர நிதிப் பிரிவைச் சேர்ந்த நிபுணர்கள் நடத்தி முடித்துவிட்டனர் என்று தெரிகிறது.

அடுத்த சில திங்களுக்குள் இயந்திரங்கள் வந்துவிடக்கூடும் என்றும், தொழிற்சாலை கட்டும் வேலை அடுத்து தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது துவங்கினால் ஆசியாவிலேயே இரண்டு மிகப் பெரிய பால் பவுடர் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைவதாகும்.

முதல் பெரிய தொழிற்சாலையை, பம்பாய்க்கு அருகிலுள்ள ஆனந்தில், பண்டித நேரு, அக்டோபர் 30-ந் தேதியன்று துவக்கி வைத்திருக்கிறார்.

அணுசக்தி உலை

பம்பாயில்தான் என்பது உறுதியாகிறது

பம்பாய், அக். 31—

இந்தியாவில் முதல் அணுசக்தி உலை பம்பாயில் நிறுவப்படும் என்று வெளிவந்த செய்தி இப்போது உறுதியாகிவிட்டது.

இந்திய அணுசக்திக் குழுத் தலைவரான டாக்டர் பாபா, பம்பாயை அடுத்த ட்ராம்பேயில் உள்ள அணுசக்தி நிலையத்தில், 1957-ம் ஆண்டுவாக்கில் அணு உலை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை கனடாவுடன் இந்தியா மேற்கொண்டுவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

தியெமின் முதல் நடவடிக்கை

'நேச விரோதமானது' என பிரெஞ்சு வர்ணனை

சைகோன், அக். 30—

தென் வியட்நாம் குடியரசுத் தலைவரான நிகோ தீன் தியெம், கடந்த டிசம்பர் 10-ந் தேதியன்று கையெழுத்தான பிரெஞ்சு—வியட்நாம் நிதி, பொருளாதார ஒப்பந்தத்தைக் கண்டித்திருக்கிறார்.

பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரு நாடுகளிடையேயும் உள்ள வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஒப்பந்தமாகும் அது.

'ஆண்டு முடிவதற்கு இரண்டு திங்கள் முன்பதாகவே எவரேனும் எதிர்ப்புத் தெரிவித்தாலன்றி ஆண்டுதோறும், தானாகவே ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்,' என்பது விதியாகும்.

இப்போது தீன் தியெம், ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

தியெமின் இந்த நடவடிக்கை, 'நேசவிரோதமானது' என்றும், ஆனால், 'விதிப்படி முறையானதே' என்றும் பிரெஞ்சு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.'

அணுசக்தியினால் இயங்கும் கருவிகள்

விநியோகம் செய்வது பற்றி பேச்சு வார்த்தைகள்?

பாக்., இந்தியா பங்கேற்குமாம்!

அணுசக்தியினால் இயங்கும் கருவிகளை விநியோகம் செய்வது பற்றி, இப்போது பிரிட்டனுடன் 17 நாடுகள் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு முன்வந்துள்ளனவாம். இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுவதற்கு இந்தியாவும், பாகிஸ்தானும் அழைக்கப்பட்டிருக்கிறதாம்.

அணுசக்தி கருவிகளை, அநேகமாக பிரிட்டனும், கனடாவும் இந்தியாவுக்கு வழங்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

விமானந் தாங்கிக் கப்பல்கள்

அணுக் கதிர்களை சமாளிக்கும்?

250 இலட்சம் பவுன் செலவில், அணுக் கதிர்களை சமாளிக்கும் விதத்தில், 'ஆர்க் ராயல்' என்ற விமானந் தாங்கிக் கப்பலை பிரிட்டன் கட்டியுள்ளதாம்.

கப்பலின் அருகில் அணு குண்டு வெடித்தால், கப்பலின் எல்லாக் கதவுகளையும் இறுக மூடிக்கொள்ளலாமாம். கப்பலின் உள்ளேயிருப்பவர்கள் சுவாசிப்பதற்கு, சுத்தமான காற்றை உற்பத்தி செய்வதற்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றனவாம்.

காந்தியாரின் குறிக்கோள்

நேருவின் கருத்து

"ஒவ்வொருவருடைய கண்ணிலும் உள்ள கண்ணீரைத் துடைப்பதே என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் — என்று, காந்தியார் ஒருமுறை கூறினார். மகாத்மாக்களுக்கு இது ஒருக்கால் சாத்தியமாக இருக்கலாம்; ஆனால், நம்மைப் போன்ற சாதாரண மக்களுக்கு அது சாத்தியமாக இயலாது; எனினும், இது ஒரு இலட்சியமாக விளங்கக்கூடியதாகும்; இந்த இலட்சியத்தை முன்னிறுத்தி, தவறான வழியில் செல்லும் ஊக்கத்தைக் குறைத்து, மற்றவர்களுக்கு எதிராக நடந்துகொள்ளும்போது நம்முடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருக்கும்,"

என்று, பிரதமர் நேரு, டில்லியில் நடைபெறும் இந்தியத் தொழில் பொருட்காட்சி விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

"தொழில் நுணுக்கத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன இயந்திரத்துறைகளினின்றும் நாம் ஓடிவிட முடியாது. இன்றையப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அவைகள்தான் ஏற்றவையாகும். நாம் இயந்திரங்களை உபயோகித்துத்தான் தீரவேண்டும்: ஆனால், இவைகளை உபயோகிக்கும்போது, அவற்றிற்கு மனிதன் அடிமையாகிவிடக்கூடாது; மனித உணர்ச்சியுடன் அவைகளைப் பயன்படுத்த வேண்டும்; அவ்வாறில்லாவிட்டால், இயந்திரங்கள், மனிதனிடமிருந்து வெகுதூரம் சென்றுவிடுகின்றன; அதனால், பல தீமைகள் விளைகின்றன; போர்க் காலங்களில் பல தீமைகளை அவைகள் விளைவித்துவிடுகின்றன —மனிதர்களின் மனோபாவத்தை மாற்றும் அளவுக்கு அவை மேலோங்கி வருவதுடன், இராணுவ மனப்பான்மையையும் அவை உண்டாக்கி விடுகின்றன," என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெரும் சோதனை ஏற்பட்டுள்ளதாம்

காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்

"சுதந்திரம் கிடைத்த எட்டாண்டுகளுக்குப் பின்னர், மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளினால், நாட்டிற்குத் தற்போது ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்டுள்ளது; சிபாரிசுகளின்மூலம் எழும் பிரச்சினைகளை சமாதான முறைகளிலேயே தீர்த்துக்கொள்ளுவதற்கு மக்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்; நாட்டின் சுதந்திரம் பறிபோகாமல் இருப்பதற்கு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்," என்று, காங்கிரஸ் தலைவர் தேபர், கோலார் நகர மன்ற'த்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மலையேறும் குழுவினர்

வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்?

டாக்டர் சிங் குற்றச்சாட்டு

காட்மண்டு, அக். 29—

வெளி நாடுகளிலிருந்து நேபாளத்திற்கு வந்துள்ள மலையேறும் குழுவினர் பலர், உண்மையில் மலையேறும் வேலை செய்வதைவிட வேவு பார்க்கும் வேலையையே மேற்கொண்டிருக்கின்றனர் என்று தமக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதாகப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய ஜனநாயகக் கட்சித் தலைவர் டாக்டர் கே ஐ சிங் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மேலும், வெளிநாட்டு உதவி 'மிஷனரி'கள் பலவும், நாட்டின் ஒரு பகுதியை மற்றொரு பகுதியுடன் மோதவிடும் வேலையில், பிரித்து ஆளும் முறையைப் பின்பற்றி ஈடுபட்டு வருகின்றன என்றும் சிங் குற்றம் சாட்டியிருக்கிறார்.

மேலும் அவர், நேபாளத்தில் அமையும் எந்த ஒரு இடைக்கால சர்க்காரையும் மக்கள் சர்க்கார் என்று அழைக்க முடியாது எனவும், அத்தகு சர்க்கார் எல்லாம், மன்னனின் நேரடி ஆட்சியின் ஒரு பகுதியாகவே கருதப்பட முடியும் என்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள்

தி. த. நா. காங்கிரஸ் விளக்கம்

அண்மையில், மாநில புனரமைப்புக் குழு செய்துள்ள சிபாரிசுப்படி திரு—தமிழகப் பகுதிகளில் ஐந்தினை மட்டும் தாய்த் தமிழகத்துடன் இணைப்பது என்ற சிபாரிசு குறித்து விவாதிப்பதற்காக, நாகர்கோவிலை அடுத்த இரணியல் எனும் இடத்தில் திரு—தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தி. த. நா. கா. தலைவர் நேசமணி தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விவரம் கீழே தரப்படுகிறது:—

"தோவாளை, அகத்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகிய 5 தாலுகாக்களை சென்னை மாநிலத்துடன் சேர்ப்பதற்கு மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்திருப்பதை திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் வரவேற்கிறது. ஆனால், மீதியுள்ள 4 தமிழ் தாலுகாக்களான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் தாலுகாக்கள் விலக்கப்பட்டிருப்பது குறித்து கவலை தெரிவித்துக்கொள்கிறது. தேவிகுளம், பீர்மேட்டில் தமிழர்களே அதிகத் தொகையினராக உள்ளனர். சென்னை மாநிலத்துடன் சேருவதற்கு அப்பகுதி மக்கள் பலமுறை கருத்து தெரிவித்திருக்கின்றனர் அங்குள்ள பரவலான ஏலக்காய் எஸ்டேட்டுகள் சென்னை மாநிலத்திலுள்ளவர்களுக்கே சொந்தமாக இருக்கின்றன. பொருளாதார, நிர்வாக வகையிலும் இவைகள், சென்னை மாநிலத்துடன் சேர வேண்டியதேயாகும். இந்த அம்சங்களை மாநிலக் குழு புறக்கணித்திருக்கிறது. தேவிகுளம், பீர்மேட்டிலிருந்து தமிழர்களை வெளியேற்ற திரு—கொச்சி சர்க்கார் பின்பற்றிய அடக்குமுறைகள்—குறிப்பாக, குடியேற்றத் திட்டம் அடியோடு தோல்வி அடைந்திருக்கிறது. தேவிகுளம், பீர்மேட்டை கேரளத்தில் சேர்க்க குழுவினர் கூறியுள்ள இரு காரணங்களை ஏற்க முடியாது.

"மாநிலங்கள் அமைக்கும் பிரச்சினையில், இயற்கை வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதை, ஒரு அடிப்படை அம்சமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றிருந்தும், தேவிகுளம், பீர்மேடு பிரச்சினையில், இக்கொள்கை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

"இப்போது, வீணாகப்போகும் தண்ணீரை உபயோகமாகப் பயன்படுத்துவதற்கு திரு—கொச்சி சர்க்காரிடம் திட்டம் ஏதும் கிடையாது. ஆனால், பெரியாறு, கல்லாறு, சின்னாறு தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்த சென்னை சர்க்காரிடம் நல்ல திட்டங்கள் இருக்கின்றன. கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தரிசாகக் கிடக்கும் ஏராளமான நிலங்களின் பாசன வசதிக்கு அந்நதிகளைத்தான் சென்னை சர்க்கார் நம்பியிருக்கிறது

"பெல்லாரி மாவட்டத்தில், மல்லாபுரம் உப-தாலுகாவை ஆந்திரர்வுக்கு மீண்டும் மாற்றுவதற்கு, எக்காரணத்தால் குழு சிபாரிசு செய்ததோ, அதே காரணம், பெரியாறு தண்ணீர் பிரச்சினையில் குழுவால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிவாசல், பெருவந்தனம் பகுதிகளை தி. த. நா. காங்கிரஸ், பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்திருப்பதை குழு தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறது என்றே இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

"நெய்யாற்றங்கரை சம்பந்தப்பட்ட வரை தில்லுமுல்லு செய்யப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டே, குழு அதன் தீர்ப்பை வெளியிட்டிருக்கிறது. விளவங்கோடு தாலுகாவுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க நெய்யாறு அணையிலிருந்து இடதுகரை வாய்க்கால் வெட்ட பல பஞ்சாயத்துக்களும், தொகுதி மக்களும் வெளியிட்ட கோரிக்கையை குழு கவனித்துப் பார்க்கவில்லை.

"சித்தூர் தாலுகா பிரச்சினையில், கோயம்புத்தூரே இதன் உத்தியோகப் பற்றற்ற தலைநகராக இருந்துவந்திருக்கிறது. வாழையடி வாழையாக கோயம்புத்தூரைச் சுற்றிதான் அத்தாலுகாவின் பொருளாதார வாழ்க்கையும், வர்த்தகமும் பின்னிக்கிடக்கின்றன. இந்த இயற்கை சூழ்நிலையிலிருந்து அத்தாலுகாவை குழு துண்டித்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும்

"மேற்படி தவறுகளை சீர்திருத்தி, தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் தாலுகாக்களை சென்னை மாநிலத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இந்திய சர்க்காரை கோர வேண்டும் என்று தி. தா. நா. கா. ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

இந்திய சர்க்காரிடம் சமர்ப்பிப்பதற்காக மேற்படி தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அறிக்கையும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

'தீண்டாமை ஒழிவதற்கு மக்கள் மனம் மாற வேண்டும்'

குடியரசுத் தலைவர் இராசேந்திரர் கருத்து

ஜெய்ப்பூர், அக் 30—

தீண்டாமையை சட்டத்தினாலோ நிர்ப்பந்தத்தினாலோ ஒழித்துவிட முடியாது என்றும், மக்களின் மன மாற்றம்தான் அதனை ஒழிக்க முடியும் என்றும் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் தெரிவித்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான ஒரு தனி விடுதிக் கட்டிடத்திற்குக் கால்கோள் விழா நடத்திய அவர் மேலும் சொன்னார்:—

"தாழ்த்தப்பட்டவர்களுக்கென நிறுவனங்கள் கூடாது; அவர்களை நம்முடன் இணைத்துக் கொள்ளவேண்டும். தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கு, அவர்களுக்கென தனித் தேர்தல் தொகுதிகள் அமைப்பது உண்மையான வழியானது என்பதால், காந்தியார் அதனை எதிர்த்தார் என்பது குறிப்பிடத் தகுந்தது."

★

சாதிவெறியை ஒடுக்க சமூக இயக்கம்

பாட்னா, அக். 30—

'சாதி வித்வேஷ் உன்முலான்-சமிதி என்ற பெயரில், பீகார் மாநிலத்தில், வளர்ந்துவரும் சாதிவெறியை ஒடுக்குவதற்கு என்று ஒரு சமூக இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறதாம்.

பீகார் பொதுப் பணித் தேர்வுக் குழுவின் ஓய்வுபெற்ற அங்கத்தினரான பிஷுவர்தேவ் நாராயண் சிங் என்பார் அந்த இயக்கத்தின் முதல் தலைவராக்கப்பட்டிருக்கிறாராம்.

இயக்கத்தைத் துவக்கிவைக்குமாறு பண்டித நேரு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறாராம்.

வரும் டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் விவாத அரங்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்குமாறு, ஜெயப்பிரகாஷ் நாராயண் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறாராம்.

'அனுவசியமான சுமைகள்' பற்றி நேரு!

"ஜாதி மனப்பான்மையையும், மதத்தினால் பிறந்த தவறான சம்பிரதாயங்களையும், மக்கள் விட்டுவிடவேண்டும்; மக்களுக்கு இவைகள் அனுவசியமான சுமைகளாகும்; சீனப் புரட்சியைப் பற்றிப் பலர் பேசுகின்றனர்; ஆனால், அங்கு நடைபெற்ற பிரம்மாண்டமான புரட்சி—பல நூற்றாண்டுகளாகக் கட்டுக்கோப்புடன் பாதுகாத்திருந்த சம்பிரதாய வழக்கங்களிலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட்டதுதான்," என்று, பிரதமர் நேரு, சூரத் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இன ஒதுக்கல் தரும் 'விளைவு!"

"தென்னாப்பிரிக்காவிலுள்ள ஜோஹனஸ்பர்கில், டிராம், பஸ் போக்குவரத்துக்களில் கையாளும் இனவேற்றுமைக் கொள்கையில், வருடவாரியில் 5-இலட்சம் பவுன் நஷ்டம் ஏற்படுகிறது" என்று, நகரப்போக்கு வரத்து மானேஜர் கூறியுள்ளார்.

"கேப்டவுனில், ஒரே பஸ்ஸில் எல்லா இனத்தவரை ஏற்றிக் கொள்கின்றனர்; ஜோஹனஸ்பர்கில் 95-சதவிகிதம் பஸ்களில் ஐரோப்பியர் மட்டுமே செல்கிறார்கள்; 5 சதவிகிதம் பஸ்களில்தான் ஐரோப்பியரல்லாதவர் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கீழ்த்திசை மொழிகள் மாநாடு

அண்ணமலை நகர், அக். 31—

டிச. 26-ந் தேதியன்று இங்கு ஆரம்பமாகும் அகில இந்தியக் கீழ்த் திசை மொழி (ஓரியண்டல்) மாநாட்டில், இந்தியா இலங்கையிலிருந்து சுமார் 600-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் கலந்து கொள்வர்; 3- தினங்களுக்கு மாநாடு நடைபெறும். டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.

அபூர்வமான ஓலைச் சுவடிகள், ஓவியங்கள் ஆகியன அடங்கிய ஒரு கண்காட்சியும் நடைபெறும்.

ஆரம்பக் கல்விக் குழு அறிக்கை

சர்க்கார் பரிசீலனையில் இன்னும் இருக்கிறதாம்

சென்னை, அக். 31—

இலாகா ரீதியான பரிசீலனையிலேயே ஆரம்பக் கல்விக் குழுவின் அறிக்கை இன்னமும் இருந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. பரிசீலனை முடிந்தவுடன், பல்வேறு சிபாரிசுகள் பற்றி சர்க்கார் முடிவு செய்யுமென்றும், அடுத்த பள்ளிக்கூட ஆண்டிலிருந்து அம்முடிவுகள் அமுலுக்குக் கொண்டு வரப்படக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

'இனியும் விட்டுக்கொடுக்க மாட்டோம்!'

மாதா கோவில் பீடத்திலிருந்து மகாரியஸ் விடுதலை முழக்கம்!

நிகோசியா, அக். 31—

"சைப்ரசில் எவ்வளவு பிரிட்டிஷ் இராணுவம் குவிக்கப்பட்டாலும், அவைகளால், நாங்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று பூண்டுள்ள உறுதியைக் குலைத்து விடமுடியாது,"

என்று, ஆர்ச் பிஷப் மகாரியஸ், மாதாகோவில் பீடம் ஒன்றிலிருந்து முழங்கியபோது கூடியிருந்த ஆயிரக்கணக்கான சைப்ரஸ் கிரேக்க இளைஞர்கள் பெரும் ஆரவாரப் பேரொலி எழுப்பி இருக்கின்றனர்.

பாதிரியார் மேலும் அங்கு குறிப்பிட்டதாவது:—

'தங்களது சுதந்திரப் போராட்டத்தில், பிரிட்டன் ஒரு சிக்கறுக்க முடியாத சங்கடத்திற்கு ஆளாகக் கூடாது என்பதற்காக, சைப்ரஸ் கிரேக்கர்கள் எத்தனையோ முறை விட்டுக் கொடுத்திருக்கின்றனர் இப்போது, 'இனியும் விட்டுக் கொடுக்க முடியாது' என்ற நிலை பிறந்துவிட்டது.

"ஆனால், பிரிட்டன், 'சுயாட்சி' என்ற மாக்மில்லன் திட்டத்தை நம்மீது திணிக்க வேண்டுமென வற்புறுத்தி வருகிறது. சைப்ரஸ் சிக்கலுக்கு, சுயநிர்ணயமல்லாத வேறு வழிகளைக் காண பிரிட்டன் முயலுகிறது போலும்! ஆனால், நாம் திட்டமாகத் தெரிவிக்கிறோம்—நமது போராட்டத்தின் ஒரே ஒரு இலட்சியம் எல்லாம், நமது தேசிய விடுதலையைப் பெறுவது தான்—என்று!"

சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்

'ஒழிக்கப்படவேண்டியவையாகும்'

டாக்டர் இராதாகிருஷ்ணன் கருத்து

உதயபூர், அக். 30—

"மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் உள்ள சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்தாக வேண்டும்.

"மக்களில் ஒருபிரிவினர் உல்லாசத்தில் புரளவும், ஒருபிரிவினர் அரை நிர்வாணமாய் உலவவுமான நிலை நீடிப்பது அரசியல்வாதிகளுக்கும், ஆட்சி பீடத்திலிருப்போருக்கும் தரப்படும் அறைகூவலாகும்,"

என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் இங்கு, ஜனதா கல்லூரி மாணவர் விடுதிக்கு கால்கோள் விழா நடத்துகையில் குறிப்பிட்டார்.

தென்னாற்காடு பழுப்பு நிலக்கரிப் பகுதிகள்

தேங்கியிருக்கும் நீரை நீக்குவதற்குப் புதிய வழி?

தென்னாற்காடு பழுப்பு நிலக்கரிப் பிரதேசத்தில், பூமிக்குக் கீழ் தேங்கியிருக்கும் தண்ணீரை நீக்குவதற்கு, கிழக்கு ஜெர்மனி, ஒரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்துள்ளதாம்

கிழக்கு ஜெர்மனியிலும் இது போன்று, பழுப்பு நிலக்கரிப் பிரதேசத்தில் தண்ணீர் பிரச்சினை இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கழகச் செய்தி

★

நீலகிரி (ராப்ராய்) தி.மு.க. அலுவலகத் திறப்பு விழா

23—10—55ல் ராப்ராய் திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத் திறப்பு விழா, தோழர் பி. ஜி. துரையரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. கணபதி, ஆர். தங்கவேல் ஆகியோர் பெரியார் ஈ. வெ. ரா., அண்ணா ஆகியோரது உருவப் படங்களைத் திறந்துவைத்துச் சிறிது நேரம் பேசிய பின், தி. மு கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசி கிளைக் கழக அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

பிற்பகல் 2 மணிக்கு கோத்தகிரில் திடலில் தோழர் ஜெ. கருணாநாதன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் பேப்பன் சிறிது நேரம் பேசியதும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தி மு. கழகம் துவக்கப்பட்டதின் நோக்கம், அதன் அடிப்படைக் கொள்கைகள் பற்றியும், மற்றும் ஐந்தாண்டுத் திட்டம், மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கை ஆகியவை பற்றிய தி மு. கழகத்தின் கருத்துக்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

செய்திச் சுருள்

★

சென்னை மாணவர் மன்றம்

இலக்கிய ஆராய்ச்சிக் கூட்டம் துவக்க விழா

31—10—55 மாலை 3-30 மணிக்கு, சென்னை மாணவர் மன்றச் சார்பில், இலக்கிய ஆராய்ச்சிக் கூட்டத்தை, செகந்தராபாத் மாபூப் கல்லூரித் தலைவர் திரு எம். எஸ். கோடீசுவரன் அவர்கள் துவக்கி வைத்தார். திரு. மயிலை சிவமுத்து அவர்கள், 'திருமுருகாற்றுப் படை'த் திறனாய்வின் முதல் சொற்பொழிவாற்றினார். திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள் திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரரைப் பற்றி விவாதித்தார். திரு எஸ். எஸ். அருணகிரிநாதர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. மணி. கோடீசுவரன் பேசுகையில், ஐதராபாத் மாநிலத்தில் தமிழ் வளர்ச்சிக்காகத் தாம் செய்துள்ள தொண்டுகளைச் சுருக்கக் கூறி, மாணவர் மன்றத்தைப் பாராட்டிப் பேசினார். திரு. கோ. வில்வபதி நன்றி கூறினார். அடுத்தத் திறனாய்வுக் கூட்டம் 13—11—55 அன்று நடக்குமென அறிவிக்கப்பெற்றது.

வட சென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றம்

30—10—55 மாலை $6\frac{1}{2}$ மணி அளவில், சென்னை இராயபுரத்திலுள்ள வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றத்தில், தோழர் ஏ. ஜே. இராபர்ட் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். வி. மதிவண்ணன், இளந்திருமாறன், தாஸ், இரா. புலியரசு, வி. எஸ். ஆனந்தன், மு. போ. வீரன், பெருமாள் ஆகியோர், 'எது தேவை?' எனும் தலைப்பில் பேசினார்கள்.

சென்னை சமரச சன்மார்க்க சங்கம்

30-10-55 காலை 10 மணிக்கு சென்னை-வேளாளத் தேனாம்பேட்டையிலுள்ள மேற்படி சங்கப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, சங்க வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், ஒன்பது பேரடங்கிய செயற் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பதவியினின்று பொம்மை சுல்தான் விலகுகிறார்!

பென் யூசுப்பிற்கு அமோகமான வரவேற்பு

பாரிஸ், அக். 31—

மொராக்கோ சுல்தானாக நியமிக்கப்பட்டிருந்த முகம்மது பென் அராபா இன்று பதவி துறந்தார். தனது இடத்திற்கு நாடு கடத்தப்பட்ட மன்னரான பென் யூசுபே வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இவர் தனது விலகல் கடிதத்தை டாஞ்சியிலிருந்து, பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் ரெனே கோட்டிக்குக் கடித மூலம் தெரிவித்திருக்கிறாராம்.

அவர், மொராக்கோ தலைநகரான ரபாட்டிலிருந்து பிரெஞ்சு அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க வெளியேறி, கடந்த ஒரு மாதகாலமாக டாஞ்சியரில் குடியிருந்து வருகிறார்.

மடகாஸ்கரிலிருந்து பாரிஸ் வந்து சேர்ந்த நாடுகடத்தப்பட்ட சுல்தானான பென் யூசுபை ஏராளமான மொராக்கோவாசிகள் கூடி நின்று வரவேற்று மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரப் பேரொலி எழுப்பியிருக்கின்றனர்.

46 வயதான அந்த சுல்தானை, பலர், காலைத் தொட்டு வணங்கி வாழ்த்தியிருக்கின்றனர்.

மகிழ்ச்சிப் பெருக்கால் கண்களில் நீர்வழிய, பென்யூசுப், தனது மக்களிடத்தில் அராபி மொழியில் பேசியிருக்கிறார்.

சீக்கிரமே தான் மீண்டும் மொராக்கோ சிம்மாசனத்தில் அமருவதற்குப் பிரெஞ்சு சர்க்கார் அனுமதிப்பர் என்று தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

உலக பாங்கியில் பெரும் கொள்ளை

பல நாட்டு நாணயங்கள் திருட்டுப் போயின

வாஷிங்டன், அக். 31—

இங்குள்ள உலக பாங்கியிலிருந்து, அமெரிக்கா, மற்றும் வெளிநாட்டு கரன்சி நோட்டுக்களை கொள்ளைக்காரன் ஒருவன் எட்டு நாட்களுக்கு முன் கொள்ளையிட்டுச் சென்று விட்டதாகத் தெரிய வருகிறது.

பவுண், பிராங்க், மார்க், கில்டர், லயர், பயஸ்டர், ரூபாய், யென்—முதலிய பல நாட்டு நாணயங்களையும் கொள்ளைக்காரன் திருடிச் சென்றிருக்கிறான்.

இத்துடன், அமெரிக்காவிலிருந்து வெளியேறுவதற்குப் போதுமான 3,000 அமெரிக்க டாலரையும் எடுத்துச் சென்றிருப்பதாகத் தெரிய வருகிறது.

பாங்கி நிர்வாகிகள், இந்தப் பணத்தை எல்லாம் மிகுந்த பாதுகாப்புடைய பிரதான கட்டிடத்தை அடுத்த வாடகைக் கட்டிடம் ஒன்றில் பூட்டி வைத்திருந்தனர். கொள்ளைக்காரனுக்கு எவரின் உதவியும் கிடைத்திருக்கலாம்; அல்லது, கிடைக்காமலுமிருந்திருக்கலாம். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இன்று காலை 9 மணி வரை அந்தக் கொள்ளையன் தனது வேலையைச் செய்திருக்கிறான்.

கதவுக்கு எந்தச் சேதமும் உண்டுபண்ணாமல் கட்டிடத்திற்குள் நுழைந்து பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியை உடைத்து இந்த திருட்டு வேலை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவன் கொள்ளையிட்டுச் சென்ற தொகையின் மதிப்பு 10,700 பவுன் என்றும், மேலும், விநியோகிக்கப்படாத 3,500 பவுன் பெறுமான பிரிட்டிஷ் பிரயாணிகள் 'செக்'குகளும் கொள்ளையிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கொள்ளையிட்டவன் அந்தத் தொகையினை அமெரிக்காவில் செலவிட முடியாது என்பதாலும், திருட்டுப்போன 'கரன்சி' நோட்டுகளின் குறிப்பெண் விவரங்கள் தொடர்புடைய எல்லா நாடுகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாலும், திருடிய தொகையைக் கொண்டு கொள்ளையன் பலன் எதும் பெற முடியாது என்று கூறப்படுகிறது.

ரூ. 25,000 மோசடி?

ஓய்வுபெற்ற சென்னை சர்க்கார் அதிகாரி கைது

பம்பாய், அக். 31—

நேற்றைய தினம் இங்கு கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற சென்னை சர்க்கார் அதிகாரியான எம். வைத்தியநாதன் என்பவரை, உதவி பிரதம மாகாண நீதிபதி ஜாமீனில் விடுதலை செய்திருக்கிறார்.

அவர், சென்னை நீதிமன்றம் ஒன்றில் தன்னைத் தாக்கல் செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறாராம்.

சென்னை விவசாய தொழில் கடன் நிறுவனத்திற்குச் சொந்தமான 25,000 ரூபாயை, வைத்தியநாதன், அந்த நிறுவனத்தின் நிர்வாகியாக இருந்த நாட்களில் (1949-ல்) மோசடி செய்ததாக சந்தேகிக்கப்படுவதாக போலீசார் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

அண்ணாதுரை

நிகழ்ச்சிகள்

★

நவ. 5 சென்னை-திருவோற்றியூர்: காலை-திருமணம்; மாலை: தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

6 சென்னை-சூளை: நிதி அளிப்புக் கூட்டம்

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

நவ. 1 சென்னை-சேத்துப்பட்டு
2 ஆற்காடு
3, 4, 5 வேலூர்
6 காஞ்சீபுரம்—கண்ணன் டாக்கிசில் மாநில மாநாட்டு நிதிக்காக காலை 9 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு

திருக்குறள் வகுப்பு

2—11—55 மாலை 7 மணிக்கு சென்னை-இராயபுரம், எண் 59 மன்னார்சாமி கோயில் தெரு, குறள் நெறிக் கழக அறையில், திரு. கி. தியாகராசன் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடைபெறும்

பிரதமர் புல்கானின்

நீலகிரித் தோட்டங்களைப் பார்வையிடுவாராம்

ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின், நவ. 27-ந் தேதியன்று டில்லி வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் மாத இறுதியில் அவர் தென்னாட்டிற்கு வருவாரென்றும், நீலகிரி பகுதிகளிலுள்ள காப்பி, தேயிலைத் தோட்டங்களை அவர் பார்வையிடுவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யாவில், காப்பிச் செடிகள் கிடையாதென்பது நினைவில் கொள்ளத் தக்கது.

பண்டித நேருவின் கவனத்திற்கு!

உலக சமாதானத்திற்கு 'வாஜ்பேய யாகம்'!

பூனா, அக் 31—

'வாஜ்பேய யாகம்' என்ற வேத ஆகம யாகம் ஒன்று, உலக சமாதானத்திற்கு என்று கூறி, இன்று இங்கு துவங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு பம்பாய் கவர்னர் ஹரி கிருஷ்ண மெகதாப் தலைமை தாங்கியிருக்கிறார்.

'ஓமம்' என்ற பெயரில் பெருந்தீ மூட்டப்பட்டு, ஒரு தேரில் வைத்துத் தெரு நெடுக இழுத்துக் கொண்டு வந்திருக்கின்றனர். 17 பண்டிதர்'கள் கூடவே வலம் வந்து வேதங்களை ஓதியிருக்கின்றனர்.

பீகாரின் முன்னாள் கவர்னரான டாக்டர் எம் எஸ். ஆனே என்பார் இந்த யாகம் நடைபெறுவதற்கு இந்துக்களெல்லாரோரும் உதவியதாகக் கூறியிருக்கிறார்.

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், சென்னை கவர்னர் பிரகாசா முதலியோரிடமிருந்து யாகம் வெற்றி பெற வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தனவாம்!

விடுதலைப் போரில் உயிர் நீத்தவர்கள்

கோவா தியாகிகள் சந்ததிக்கு தலா ரூ. 1,000 தரப்படும்

பூனா, அக். 31—

கோவா விடுதலைப் போராட்டத்தில் உயிர்துறந்த 20 இந்தியக்குடி மக்களின் முதல்சந்ததியினருக்கு தலா ரூ. 1,000 வீதம் வழங்குவதற்கு கோவா விடுதலை உதவிக் குழு தீர்மானித்துள்ளது. அக்குழுவினர் வசூல் செய்த தியாகிகள் நிதியிலிருந்து இத்தொகை தரப்படும்.

அடிப்படைச் சம்பளத்தில்.... 5 மாத 'போனஸ்'!

பம்பாய், அக் 31—

பம்பாயிலுள்ள லீவர் பிரதர்ஸ் ('சன்லைட்', 'லைப்பாய்' சோப்புகள் நிறுவனம்) கம்பெனியின் இரு கிளைகளைச் சேர்ந்த சிப்பந்திகளுக்கு 1951-ம் ஆண்டு போனஸாக ஐந்துமாத அடிப்படைச் சம்பளத்தை வழங்கும்படி, பம்பாய் தொழிலாளர் அப்பீல் டிரிபியூனல் தெரிவித்துள்ளது.

1953-ம் ஆண்டில், $4\frac{1}{2}$ மாத அடிப்படைச் சம்பளத்தைப் போனஸாகத் தருமாறு மற்றொரு தொழில் டிரிபியூனல் தீர்ப்பளித்திருந்தது.

சென்னை, கல்கத்தா, டில்லியிலுள்ள இக்கம்பெனியின் சிப்பந்திகளும் பம்பாய் சிப்பந்திகளைப் போலவே நடத்தப்பட வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மத்திய சர்க்கார் நோக்கம் என்ன?

சென்னை, அக். 31—

ஆங்கிலப் படங்களை மட்டும் திரையிடும் தியேட்டர்களில், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட படங்களையும் திரையிட வேண்டுமென்று, மத்திய சர்க்கார் விரும்புகிறதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக, மாநில சர்க்கார்களின் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளனவாம்!

ஒப்புக் கொள்ளவில்லையாம்!

நியூயார்க், அக். 31—

"தென்மேற்கு ஆப்பிரிக்காவில் மேற்பார்வையிடுவதற்கு சர்வதேச நிறுவனத்துக்கு உரிமை இருப்பதை, தென்னாப்பிரிக்கா ஒப்புக் கொள்ளவில்லை," என்று, ஐ நா. தர்மகர்த்தா குழுவில், தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பி. & சி. ஆலைத் தொழிலாளர்களின் தி.மு.க. மாநில மாநாட்டு நிதியளிப்புக்கூட்டம்

★

காலம்: 6—11—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: திரு. வி. க. திடல் (கான்ரான்ஸ்மித் நகர்)

தோழர் டி. எஸ். சண்முகம் தலைமையில்

சி. என். அண்ணாதுரை

மற்றும் பலர் பேசுவர்

—பி. & சி. ஆலைத் தொழிலாளர்கள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மிருகக் காட்சிசாலை நூற்றாண்டு விழா

வெள்ளைக் காகம் இறந்தது பற்றி கவர்னர் குறிப்பு

சென்னை, நவ. 1—

இந்தியாவிலேயே மிகப்பழமையான சென்னை மிருகக் காட்சிசாலையின் நூற்றாண்டு விழாவை கவர்னர் பிரகாசா நேற்றுமாலை துவக்கிவைத்து, விழாவிற்குத் தலைமையேற்று சொன்னார்:—

"வெகு காலமாக மனிதனின் நண்பனாக பிராணிகள் இருந்து வந்துள்ளன. ஆயிரக்கணக்கான பணிகளுக்காக அவைகளைப் பயன்படுத்தும் மனிதன், அவைகளுக்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். மனிதனுக்கு முன்பே பிராணிகள் தோன்றின; ஆகவே, அவைகளிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ளவேண்டியது அதிகமிருக்கிறது.

"பிறநாடுகளைப்போல், இந்தியாவில் பிராணிகள் மதிக்கப்படாமலிருப்பது வருந்தத் தக்கதாகும்; அவற்றை அன்போடும் நடத்துவதில்லை; இந்த நிலை மாறியே ஆகவேண்டும்.

"திருவண்ணாமலையிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வெள்ளைக் காகம் இறந்துவிட்டதென்ற செய்தி எனக்கு அதிர்ச்சியைத்தான் தந்தது. 'அடிமை'யாகக் கூண்டில் அடைபடுவதற்கு விரும்பாததாலேயே அக்காகம் மரணமடைந்திருக்கக் கூடும்."

நகரசபை மேயர் திரு ஏ சிதம்பரம் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், 'மிருகக் காட்சிசாலைகள் பொழுது போக்காக மட்டும் அமைந்திராமல் கல்வி போதிப்பவையாகவும் இருக்கின்றன' என்று குறிப்பிட்டார்.

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேது அவர்கள், நூற்றாண்டு விழா உரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல்லாத மனிதனுக்கும், காட்டு விலங்குக்கும் உருவத்தில் வேற்றுமை இருந்தாலும் 'உண்மை'யில் வேற்றுமை இல்லை இதனால்தான், பிறப்பும் பண்பாடும் இல்லாத ஒருவன், 'காட்டுமிராண்டி' என்று அழைக்கப்படுகிறான். ஆகவே, இந்த நூற்றாண்டு விழாவில் 'காட்டு வாசி'களைக் கண்டு மகிழும் அன்பர்கள், காட்சி இன்பத்தோடு கல்வியின் மாட்சியையும் அறிந்து 'ஆறறிவு' பெற்ற மக்களாக விளங்குதல் வேண்டும்."

சர்க்காரிடம் ஒப்படைக்க மறுப்பு!

"சென்னை—தண்டையார்பேட்டையிலுள்ள காலரா மருத்துவமனையை சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டியதில்லை; அதற்குப் பதிலாக, அதைக் கல்வி நிறுவனமாக மாற்றுவதற்கும், சர்க்கார் குறிப்பிட்டிருக்கும் அபிவிருத்திகளையும் அமுலாக்குவதற்கு அரசாங்கத்திணிடமே மானியமும், கடனும் தருமாறு கோரலாம்," என்று, நகர சபையின் நிதி, சுகாதார கூட்டுக் குழு சிபாரிசு செய்துள்ளது.

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

தொண்டை நோய் காரணமாகக்: கடந்த சில நாட்களாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்களுக்கு, 28—10—55 அன்று, தொண்டையில் ஆபரேஷன் செய்யப்பட்டது.

சென்னை 'ஸ்டான்லி' மருத்துவ மனையில், 'பிராட்பீல்ட் வார்டு' 1-ம் எண்ணுள்ள தனி அறையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

உடல் நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது; முழுவதும் குணம் அடைந்து வெளிவர இன்னும் 10 நாட்கள் ஆகக்கூடும் என டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னையில் மதுவிலக்கு அமுல்

தீவிரமாக்குவதற்கு இரு போலீஸ் பிரிவுகள்

சென்னை, அக் 31—

சென்னை நகரில் மதுவிலக்கை தீவிரமாக அமுல் செய்வதற்கு, நகர போலீசில் இரண்டு மதுவிலக்குப் பிரிவுகள் அமைக்கப்படவிருக்கிறதாம்.

நாளை முதல் வேலை துவக்கும் அந்தப் பிரிவு ஒவ்வொன்றிலும், ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு உதவி இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைப் போலீஸ்காரர், 10 போலீசார் ஆகியோர் இருப்பர்.

மதுவிலக்கு இலாகாவில் பணிபுரிந்தோர் பயிற்சிக்குப் பிறகு போலீஸ் இலாகாவில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று தெரிய வருகிறது.

ஈடேறுத காதல்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெல்த்திற்கு நான் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்தும் நான், இந்த விஷயம் குறித்த எனது கருத்துக்களைப் பலருக்கும் தெரிவிக்கிறேன்.

"நான் இந்த முடிவை தன்னந்தனியாகவே மேற்கொண்டிருக்கிறேன்; அப்படி இதனை மேற்கொள்ளுவதற்காக டௌன்செண்டின் மதிப்பும், குலையாத ஆதரவும் எனக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றன."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.